# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

35

# தோட்டத் தொழிலாளர்களை நாடற்றவர்களாக்கிய சிறீமாவோ - சாஸ்திரி ஒப்பந்தம்

மலையக தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக சிறீமாவோ பண்டாரநாயக்காவுக்கும், இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்குமிடையில் 1964-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24-ம் திகதி நடந்த பேச்சுவார்த்தையில் உடனடியாக எந்த முடிவும் ஏற்படவில்லை.

இந்தியா, 'சுதந்திரத்துக்கு முன் இந்தியாவை விட்டு வெளியேறியவர் இந்தியப் பிரஜைகள் அல்ல' என்ற தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தது. ஆனால், இலங்கையோ அவர்கள் இந்தியர்கள் தான். இந்தியா அவர்களைத் திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது.

இதனால் இந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்து ஆறு நாட்கள் நீடித்தது. 1964-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 25-ம் திகதி எடுக்கப்பட்ட கணக்கின்படி இலங்கையில் பத்து இலட்சத்து எண்ணாயிரத்து 269 இந்தியர்கள் (தோட்டத் தொழில் துறை சாராதவர்கள் உட்பட) இருந்தனர். இவர்களில் 28 ஆயிரத்து 269 பேர் இந்தியக் கடவுச்சீட்டு வைத்திருந்தனர். 'இவர்கள் இந்தியப் பிரஜைகள்' என்பதிலும் கண்டிப்பாக இந்தியாவுக்கு திரும்பிச் செல்ல வேண்டியவர்கள் என்பதிலும் இலங்கை இந்திய தரப்பாருக்கு கருத்து



வேறுபாடுகள் எதுவும் இருக்கவில்லை. ஆனால், இந்தியக் கடவுச்சீட்டு இல்லாமல் இலங்கையில் இருந்த 9 இலட்சத்து 75 ஆயிரம் பேரின் எதிர்காலத்தை தீர்மானிப்பது தொடர்பாகவே இருதரப்பாருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ஒருவாறாக 1964-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30-ம் திகதி இருதரப்பாரும் ஒரு உடன்பாட்டுக்கு வந்ததன் மூலம் 'ஒரு இனக் குழுவினர்' என்ற வகையில் மலையகத் தமிழ் மக்களுக்கு திட்டமிட்டு அநீதி இழைத்த சிறீமாவோ சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி 1964 ஒக்டோபர் மாதம் தொடக்கம் 1979 ஒக்டோபர் மாதம் வரையுள்ள 15 வருட காலத்தில் 5 இலட்சத்து 25 ஆயிரம் பேரை அவர்களது இயற்கையாக பிறப்பு வீத அதிகரிப்புடன் இந்தியா திருப்பி அழைத்துக் கொண்டுவிட வேண்டும் என்றும் மூன்று இலட்சம் பேருக்கு அவர்களது இயற்கையான பிறப்பு வீத அதிகரிப்புடன் இக்காலப்பகுதியில் இலங்கைக் குடியுரிமை வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. எஞ்சியுள்ள 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் தொடர்பாக 10 வருட காலத்திற்கு பின் அதாவது 1974-ம் ஆண்டு தீர்மானிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

உண்மையில் இந்தியாவில் ஒரு சிறு துண்டு நிலங்கூட சொந்தமாக இல்லாத இந்திய மண் என்ன நிறம் இருக்கும் என்று கூட அறியாத, இந்திய மண்ணில் பிறக்காத மலையகத் தோட்டத் தொழிலாளர்களை அவர்களது விருப்பத்திற்கு மாறாக நாடு கடத்துவதற்காக செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தை உலகிலிருந்த பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் சர்வதேச உதவி நிறுவனங்களும் பலமாக கண்டித்தன.

குறைந்த பட்சம் இந்த ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தையில் மலையக தமிழ் மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்காமல், அவர்களது பிரதிநிதிகள் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்காமல் ஆடு, மாடுகளை அல்லது சந்தைப் பண்டங்களை பரிமாற்றம் செய்து கொள்வதற்கு ஒப்பந்தம் செய்து கொள்வதைப் போல இந்தியாவும் இலங்கையும் நடந்து கொண்டுள்ளன என்று சர்வதேச ரீதியில் எழுந்த கண்டனங்களை இரண்டு நாடுகளுமே கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

அதற்குக் காரணம் - அப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பௌத்த சிங்கள பேரினவாத நலனையும் - லால் பகதூர் சாஸ்த்திரி. 'பார்ப்பனிய ஹிந்தி' ஆதிக்க நலனையும் பிரதிநிதித்துவப் படுத்தியதேயாகும். தமிழ்பேசும் மக்கள் என்ற வகையில் - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு இவர்கள் நாடு கடத்தப்பட வேண்டியவர்களாக இருந்தார்கள். ஹிந்தி மொழி பேசும் ஆளும் வர்க்கத்தை சேராதவர்கள் என்ற வகையிலும், பார்ப்பனிய நலன்களுக்கு முக்கிய மற்ற 'தமிழ் பேசும் கீழ் சாதியினர் (பெரும்பாலும்) என்ற வகையிலும் இந்த மக்களின் பிரச்சனையை - ஒரு முக்கியமான சமூகப் பிரச்சனையாக பார்க்க வேண்டியதேவை, லால் பகதூர் சாஸ்திரிக்கு இல்லாதிருந்தது.

துரதிர்ஷ்டவசமாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்களும், வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுபவர்களாக தங்களை சொல்லிக்கொண்டே தலைவர்களும், தமிழகத்திலிருந்த உலகத் தமிழர் தலைவர்களும் (?) இந்த அப்பட்டமான மனித உரிமை மீறலை எதிர்த்து பெரிய போராட்டங்கள் எதுவும் நடத்தவில்லை.

1964-ம்ஆண்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் நியமன எம்.பியாக இருந்தார். இவ்வொப்பந்தம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது அவர் அதை எதிர்த்து வாக்களித்தார். ஆனால் பதவியை இராஜினாமா செய்யவில்லை.

அதுபோல் தமிழரசுக் கட்சியினரும் இ[illegible]ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கான தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தனராயினும். தங்கள் பதவிகளை இராஜினாமா செய்து - தமிழர்கள் என்ற வகையில் மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து தொடர்ச்சியாக அரசியல் போராட்டம் எதையும் முன்னெடுக்கவில்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், தமிழரசுக் கட்சியும் தங்களுடைய வர்க்கக் குணாம்சங்களுக்கு ஏற்ற விதத்தில் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த எதிர்ப்புணர்வுகளுக்கு தாங்கள் தலைமை தாங்குபவர்களாக காட்டிக்கொண்டு அரசியல் இலாபம் பெறும் விதத்தில் சிறு சிறு போராட்டங்களை நடத்த முனைந்தனர்.

> **இந்தியாவில் ஒரு சிறு துண்டு நிலங்கூட சொந்தமாக இல்லாத – இந்திய மண் என்ன நிறம் இருக்கும் என்று கூட அறியாத, இந்திய மண்ணில் பிறக்காத மலையகத் தோட்டத் தொழிலாளர்களை அவர்களது விருப்பத்திற்கு மாறாக நாடு கடத்துவதற்காக செய்யப்பட்ட இந்த ஒப்பந்தத்தை உலகிலிருந்த பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் சர்வதேச உதவி நிறுவனங்களும் பலமாக கண்டித்தன**

ஆனால் சிறீமாவோ பண்டாரநாயக்கா வெகு தந்திரமாக - 'இவ் ஒப்பந்தத்திற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுபவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்' என்ற ஒரு சரத்தை இவ்வொப்பந்தம் தொடர்பான சட்டத்தில் இணைத்து, அதை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிவிட்டார்.

தங்களது சொத்துக்களை இழக்கத் தயாரில்லாத இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழரசுக் கட்சித் தலைமைகள் எதிர்ப்புப் போராட்டங்களை கைவிட்டு 'குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும்படி' மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு புத்திமதி கூறின.

தொடக்கத்தில் மலையகத் தொழிலாளர்களின் பிரச்சினைகளையும், போராட்டங்களையும் வைத்து தங்களைப் பிரபலப்படுத்திக்கொண்ட சிங்கள இடதுசாரித் தலைவர்கள், சிறீமாவோ பண்டார நாயக்க அம்மையார் வழங்கிய மந்திரிப் பதவிக்காக தோட்டத் தொழிலாளர்களைக் காட்டிக்கொடுத்து, இவ்வொப்பந்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததன் மூலம் மார்க்சிசம் லெனினிசத்தை விட சிங்கள பௌத்த பேரினவாதமே உயர்ந்தது என்பதை காட்டிக்கொண்டார்கள்.

ஸ்ரீமாவோவின் முதலாவது ஆட்சிக் காலத்தில் நடந்த மற்றொரு முக்கியமான சம்பவம் 1964-ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஏரிக்கரை [illegible]மாக்க எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்ததாகும்.

அக்காலத்தில் 'லேக் கவுஸ்' என்று அழைக்கப்படும் 'அசோசியேற்றட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன்' நிறுவனம்- இலங்கையிலுள்ள மிகப் பெரிய பொய் உற்பத்தி நிறுவனமாகவும் பத்திரிகைத்துறையில் ஏகபோக நிறுவனமாகவும் விளங்கியது. பிரித்தானியர்களுக்குச் சொந்தமாக இருந்து பின்னர் இலங்கையர்கள் கைகளுக்கு மாறிய ரைம்ஸ் ஒப் சிலோனையும், இந்திய முதலாளிகளுக்குச் சொந்தமாக இருந்த வீரகேசரியையும் தவிர்ந்த மற்றைய முக்கிய சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளையும் விழுங்கி ஏப்பம் விட்டு திட்டமிட்ட அடிப்படையில் பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வந்த அந்த நிறுவனத்தை சுவீகரிக்க வேண்டும் என்று சிறீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் அங்கம் வகித்த முன்னாள் இடதுசாரித் தலைவர்கள் சிலர் கோரிக்கை விடுத்தனர். எப்போதும் ஏகாதிபத்திய சார்பாகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பாகவும் செய்தி வெளியிட்டு வந்த அந்த நிறுவனத்தை தொடர்ந்து அதன் போக்கில் செயற்பட அனுமதிப்பது சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு அரசாங்கத்திற்கு ஆபத்தாக முடியும் என்று அவர்கள் பிரதமர் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்காவுக்கு ஆலோசனை கூறினர்.

1964-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சிறீமாவோ பண்டாரநாயக்கா'இந்த ஏரிக்கரை நிறுவனத்தை தேசிய மயமாக்குவதற்கான சட்ட முன்னறிவிப்பை பாராளுமன்றத்தில் செய்தபோது, ஐக்கிய தேசியக் கட்சியினரும், தமிழரசுக் கட்சியினரும், சிறீமாவோ அரசாங்கம் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கிறது' என்று கூறிக்கொண்டு கொழும்பில் ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடத்தினர். இந்த ஊர்வலத்தில் பெருமளவு மக்கள் கலந்து கொள்ளாவிட்டாலும் முன்னணியில் கறுப்புத்துணிகளால் வாயைக்கட்டிக்கொண்டு அருகருகாய்ச் சென்ற ஒரு சிங்களப் பிரமுகரையும் ஒரு தமிழ்



பிரமுகரையும் அன்றைய சிங்கள தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகள் புகைப்படம் பிடித்து முன் பக்கத்தில் பிரசுரித்து செய்தியும் வெளியிட்டிருந்தன.

அந்த நபர்கள் 1958 ல் தமிழ் எழுத்துக்கு தார் பூசி அழித்து இனக்கலவரம் உருவாக்குவதற்கு தூண்டுகோலாக இருந்த கே.எம்.பி. இராஜரட்ணவும், வடக்கில் சிங்கள 'ஸ்ரீ' எழுத்துகளுக்கு தார்பூசி அழித்து சாதனை படைந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமுமாவார்.

ஏகாதிபத்திய நலன்களுக்காக சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் மோதவிடும் நோக்கில் படுபிற்போக்குத்தனமான இனவாதக் கருத்துக்களை உற்பத்தி செய்து பரப்பிவந்த ஏரிக்கரை நிறுவனத்தை பாதுகாக்க பௌத்த சிங்களப் பேரினவாதியான கே.எம்.பி. இராஜரட்ணா போர்க் கொடி தூக்கியதில் ஆச்சரியம் ஏதுவுமில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு எதிரான அந்த நிறுவனத்தைப் பாதுகாக்க அவருடன் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் ஒன்றுபட்டு நின்றது மிக முக்கியமான ஒரு விடயமாகும்.

**- நக்கீரன்**